සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூகபாதுகாப்பு பிரிவு
**Ministry of Women, Child Affairs and Social Security – Social Security Division**


| | | |
|---|---|---|
| මගේ අංකය **எனது இல** My No DSD/HO/07/SD/15/05-MEP | ඔබේ අංකය **உமது இல** Your No ........................ | දිනය **திகதி** Date 2020.02.17 |

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்
சகல மாவட்ட சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர்கள்/உதவிப் பணிப்பாளர்கள்
சகல பிரதேச செயலாளர்கள்
சகல சமுர்த்தி முகாமையாளர்கள்
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
சகல பிரதேச அமைப்புக்களின் தலைவர்கள்
சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள்

**“நாட்டைக் கட்டியெழுப்பம் சுபீட்சத்தின் நோக்கு” தேசிய கொள்கைக்கேற்ப சமுர்த்தி சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்**

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை வெளியீட்டில் நிலைபேறான சுற்றாடல் கொள்கையொன்றின் கீழ் பல வேலைத்திட்டங்களை சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரிவின் மூலம் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதனை வினயமுடன் அறியத்தருகின்றேன். குறைந்த வருமானம் பெறும் மக்களை நாட்டின் அபிவிருத்திக்கும் பொதுவான அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தலைமைத்துவத்தினை வழங்கி செயற்படுத்தச் செய்வதன் ஊடாக அவர்களை வலுவூட்டுவதும் இந்த வேலைத்திட்டங்களின் உத்தேச குறிக்கோளாகும்.

**01. “பொழிவடைந்த ஒரு கிராமம்” சமுர்த்தி சிரமதான வேலைத்திட்டம் 2020.03.01**

- 2013ம் ஆண்டின் சமுர்த்தி சட்டத்தின் 5வது பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள சமுதாய அடிப்படை அமைப்புக்களை உயிர்ப்பூட்டி சமுர்த்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு பயனுறுதி வாய்ந்த பங்களிப்பொன்றினை வழங்குவதற்காக 30211 சமுதாய அடிப்படை அமைப்புக்கள் ஊடாக முழு நாடும் உள்ளடங்குகின்ற பிரகாரம் 30211 சிரமதானப் பணிகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகளைஆயத்தப்படுத்தல்.

- அதன் பொருட்டு பல்வேறு பிரிவுகளின் கீழ் சிரமதான வேலைத்திட்டங்களை ஆயத்தப்படுத்துதல்
  சமுதாய அடிப்படை அதிகாரப் பிரதேசத்தில் கடற்கரைகள் எல்லையாகின்ற சந்தர்ப்பங்களில் இந்த சிரமதானத்தை கடற்கரையினை சுத்தப்படுத்தும் சிரமதானம் ஒன்றாக ஒழுங்கு செய்தல்
  சமுதாய அடிப்படை அதிகாரப் பிரதேசம் ஒன்றில் ஆறு, குளம், அருவிகள், அல்லது கால்வாய்கள் எல்லைகளாக உருவாகின்ற சந்தர்ப்பத்தில் ஆறு, குளம், அருவிகளை சுத்தப்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டு சிரமதானத்தை ஒழுங்கு செய்தல் போன்றவற்றினை சுட்டிக்காட்ட முடியும்.


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල් பணிப்பாளர் தலைமையதிபதி Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී பிரதான கணக்காளர் Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) பணிப்பாளர் (குறு நிதி ) Director ( Micro Finance) | කාර්යාලය அலுவலகம் Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 288772** |

- ➢ சமுதாய அடிப்படை அமைப்பு அதிகார பிரதேசத்தில் மிகப் பொருத்தமான பயனுள்ள இடமொன்றில் சிரமதானத்தினை ஒழுங்கு செய்வது பொருத்தமானதாகும் என்பதுடன் இங்கு சுத்தப்படுத்தப்படும் இடத்தின் தூய்மையினை நிரந்தரமாக பேணிச் செல்லும் பொருட்டு பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றினைத் தயாரித்தல்

- ➢ சிரமதான வேலைத்திட்டத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி எரிக்கக்கூடிய கழிவுப் பொருட்களை எரிக்கவும், பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்றவைகளை தனித்தனியாக வகைப்படுத்தி அகற்றும் நடவடிக்கைகளின் பொருட்டு பிரதேசத்தின் உள்ளுராட்சி மன்றங்களுடன் முறைப்படியான ஒருங்கிணைப்பு ஒன்றினை மேற்கொள்ளல்

**02. “கடமையின் நிமித்தம் மரம் ஒன்றினை நடுவோம்” மர நடுகை வேலைத்திட்டம்**

- ➢ பிரதேசத்தின் வானிலை நிலைமையினையும் நிறைபேரான தன்மை தொடர்பிலும் கவனத்தைச் செலுத்தி மர நடுகை வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்

**03. பொதுவான ஆலோசனைகள்**

- ➢ இந்த வேலைத்திட்டத்தின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் பொதுக்கூட்ட அங்கீகாரத்தினடிப்படையில் அல்லது மேவுகை அங்கீகாரத்திற்குட்பட்டதாக நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பொதுக்கூட்டம் அல்லது நிறைவேற்றுக் குழுவில் தீர்மானிக்கப்படுகின்ற ஆகக் குறைந்த செலவினை அந்த அமைப்பின் நிதியத்திலிருந்து செலவினை மேற்கொள்ள இத்தால் அனுமதியளிக்கின்றது.

- ➢ இத்துடன் அனுப்பப்பட்டுள்ள படிவத்திற்கமைய தங்களது மாவட்டத்தில் நடாத்தப்பட்ட பிரதான வேலைத்திட்டங்களின் விபரங்களை 2020-03-10ம் திகதிக்கு முன்னர் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரிவிற்கு அனுப்புதல் வேண்டும். அதன் பொருட்டு socialdev@samurdhi.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியினைப் பயன்படுத்த முடியும்.

இப் பணிகளை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் பொருட்டு தங்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆர்.பீ.பி.திலக்கசிறி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

01. மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு கௌரவ அமைச்சர் திருமதி பவித்ரா வன்னியாராச்சி அவர்கள் - த.கூ.க.பொருட்டு
02. சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு தாரக்க பாலசூரிய அவர்கள் - த.கூ.க.பொருட்டு
03. செயலாளர், மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - த.கூ.க.பொருட்டு
04. செயலாளர், சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
05. தலைவர், சமுத்திரங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை - த.கூ.க.பொருட்டும் உ.ந.பொருட்டும்
06. பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம் - த.கூ.க.பொருட்டும் உ.ந.பொருட்டும்
07. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - வேலைத்திட்டத்தின் களப் பரிசோதனையினை மேற்கொண்டு அறிக்கையினை வழங்க
08. சகல பணிப்பாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு

TRANSLATED BY - M.M.M.JAWHAR (Translator)